DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 72/2021**

**Deposition of LW4 examined as PW** 4 (Observation Mahazar witness)

Dt. 03.07.2025

| | |
|---|---|
| Name | ரவி |
| Father's/Husband's Name | மருதமுத்து |
| Village | சருக்கை, குத்தாலம் தாலுக்கா |
| Taluk | |
| Age | 54/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 03.07.2025

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் என்னுடையது எதுவும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜரில் உள்ள எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து தெருவை சேர்ந்தவர்கள். கடந்த 26.11.2019 அன்று நானும் சருக்கை மேலத்தெருவை சேர்ந்த துரைராஜ் மகன் சுதாகரன் என்பவரும் அவரது வீட்டில் வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்த போது மணி சேகரன் வீட்டின் அருகில் பாலையூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் நின்று கொண்டு முதல் நாளன்று மகேந்திரனுக்கும் அவரது சகோதரர் மணிசேகரனுக்கு நடந்த சண்டை சம்பந்தமாக விசாரித்துக் கொண்டிருந்ததாகவும் அப்போது நானும் சுதாகரனும் அருகில் சென்ற போது எங்கள் இருவரையும் சாட்சிகளாக வைத்து சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம்

M. Ravi

3.7.25

செய்ததாகவும், மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்பொழுது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**
இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

3.7.25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை